


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் வட்டத்திலுள்ள திருமுட்டம் வருவாய் வட்டத்தைச் சார்ந்த 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து, அப்பகுதி உழவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட உத்தரவிட்டமைக்காக வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முன்னிலையில் காட்டுமன்னார்கோயில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் மற்றும் அப்பகுதி உழவர் பெருமக்கள் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.



சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று (28.11.2025) நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன், சிறப்பு அவைக்கூட்ட உறுப்பினர்கள் குழுப்படம் எடுத்துக்கொண்டனர். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான மு.பெ.சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி ச. வளர்மதி, தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சீ. சௌமியா, பதிவாளர் திருமதி பூமாலினி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் முத்துக்குமார், பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

### சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுவிப்பு!

## சிவகங்கை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு!

சிவகங்கை, நவ. 29 -

சொத்துக் குவிப்பு வழக்கில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மற்றும் குடும்பத்தினரை விடுதலை செய்து சிவகங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக அமைச்சரவையில் கடந்த 2006 முதல் 2011 வரை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக கே.ஆர்.பெரியகருப்பன் இருந்தார். இவர் அமைச்சராக பணியாற்றிய காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக ரூ.1.20 கோடி சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், கடந்த 2012ம் ஆண்டு கே.ஆர்.பெரியகருப்பன், அவரது மனைவி பிரேமா, தாய் கருப்பாயி அம்மாள், மகன் கோகுலகிருஷ்ணன், மைத்துனர் செந்தில்வேல் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.



இந்த வழக்கு சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணையின் போது அமைச்சரின் தாய் கருப்பாயி அம்மாள் இறந்துவிட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது.

இதையொட்டி அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி அறிவொளி, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்ளிட்ட நான்கு பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

# தென்காசி வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமை!

தென்காசி. நவ. 29 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ. சுப்பையா தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.சங்கவேலு, யு.எஸ்.டி. சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி மாவட்டப் பொருளாளர் இல.சரவணன் மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன்,ராஜதுரை,புனிதா, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார். நேற்று முன்தினம் ( 27.11.2025 ) கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி பாண்டியன்,பத்திரம் சாகுல் ஹமீது, மாரிசாமி, தேவதாஸ், பராசக்தி, மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன்,பொன். முத்தையா பாண்டியன், கடற்கரை, அன்புக்கரசு,சேர்மதுரை, கிறிஸ்டோபர்,குணசேகரன், பெரியதுரை,ராமச்சந்திரன், வெள்ளத்துரை,பால்ராஜ்,நகர செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணி சாமி,நாகூர் கனி, பேரூர் செயலாளர்கள் கே.டி.சி. குருசாமி,ரூபி பாலசுப்ரமணியன், மாரிமுத்து, மாவட்ட வழக்கறிஞரணி அணி அமைப்பாளர் பிச்சையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு.

தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையாக மக்களின் பேராதரவை பெற்றுள்ள இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்கள் சுமார் 200 இளம் பேச்சாளர்களை உருவாக்கி 100 க்கும் அதிகமான நூலகங்களை இளைஞர் அணியால் உருவாக்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் படிப்பகம் ஏற்படுத்தி அதன் மூலம் 20 க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டும்,இளைஞர் அறக்கட்டளை மூலம் நலிந்தோர் சுமார் 20 நபர்களுக்கு மாதந்தோறும் கல்வி,மருத்துவ உதவி அளித்து சிறப்பாக பணி செய்து வரும் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (27.11.2025) நலிந்தோருக்கு உதவிகள் வழங்கியும் பிறந்த நாளை கொண்டாடுவது என்றும்.

அரசு மருத்துவமனையில் அன்று பிறந்த குழந்தைகளுக்கு கணையாழி வழங்குவது. பொது மருத்துவமனையில் ரத்ததானம் வழங்குவது.

அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், பகுதியில் செயல்பட்டு வரும் மாற்றுத்திறனாளிகள்,நலம் குன்றிய குழந்தைகள் தங்கி உள்ள இடங்களுக்கு சென்று சிறப்பு உணவு வழங்குவது.

இளைஞர்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசு வழங்குவது.

பெண்களுக்கான கோலப்போட்டி நடத்தி பரிசு வழங்குவது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி (SIR) என்னும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணி அனைத்து வாக்குச்சாவடி அலுவலர் மூலம் நடைபெறும் பணியில் நமது கட்சியினர் (BLA2) (BDA) மற்றும் கிளை செயலாளர்கள் பணி முக்கியம் வாய்ந்தது. மேற்படிப் பணியில் வாக்காளர்களுக்கான படிவத்தினை முழுமையாக வழங்கவும் சரியாக பூர்த்தி செய்து திரும்பப் பெறுவதற்கும் (BLA 2)க்கு உதவியாக 2 நபர்களை நியமித்து பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதை தொடர்ந்து, இந்தப் பணி முடிவடைய 12 நாட்களே உள்ளதால் ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள் நேரடியாக இந்தப் பணியினை பார்வையிட்டு நமது கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் நடுநிலையாளர்களை விடுபடாமல் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

### தேனி வடக்கு மாவட்டம் – தேனி தெற்கு ஒன்றிய மகளிர் அணி சார்பில்

# 40 கிலோ மீட்டர் தூரம் - 20 குதிரைகள் ஊர்வலம்!

## வீரபாண்டி கீதா சசி ஏற்பாடு – பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டு ரசிப்பு!

தேனி, நவ. 29 –

தேனி வடக்கு மாவட்டம்தேனி தெற்கு ஒன்றிய மகளிர் அணி ஒன்றிய செயலாளர் வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதா சசி ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு தேனியில் 40 கிலோமீட்டர் குதிரை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தேனி திமுக தெற்கு ஒன்றிய மகளிர் அணி சார்பில் குதிரை ஏற்றம் தொடர்பான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தேனி அருகே உள்ள உப்புக்கோட்டை பிரிவில் துவங்கிய இப்பேரணியை வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி கொடி அசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணி முத்து த்தேவன்பட்டி, பழனி செட்டி பட்டி, தேனி பழைய பேருந்து நிலையம், மதுரை ரோடு, பாரஸ்ட் ரோடு என நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று அல்லிநகரம், அன்னஞ்சி விலக்கு, அரண்மனைப்புதூர், வயல்பட்டி என 40 கிலோமீட்டர் தூரம் சென்றடைந்து வீரபாண்டியில் நிறைவடைந்தது.

குதிரை ஏற்றம் தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட குதிரைகள் பேரணியை பொதுமக்கள், இளைஞர்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். இந்த பேரணியில் சுமார் 20க்கும் மேற்பட்ட குதிரைகள் ராஜநடை போட்டு ஊர்வலமாக சென்றது..

இதில் வீரபாண்டி பேரூராட்சி செயலாளர் செல்வராஜ், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கள் முத்துகுமார், பார்த்திபன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### செய்தி மக்கள் தொடர்புத் துறையின்

# ஊடக மையம் சார்பில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ போட்டிகள்!

## வெற்றி பெற்ற 36 பேர்களுக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்!

சென்னை, நவ.29 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சி பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து இன்று வரை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் எண்ணற்றவை. அந்த திட்டங்களின் வாயிலாக தமிழ்நாட்டின் பல கோடி மக்கள் பயன்பெற்று தன்னிறைவு என்பது அவர்களை அதிகாரம் மிக்க வர்களாக மாற்றியுள்ளது.

அதில் முக்கியமான திட்டமாக “உங்களுடன் ஸ்டாலின் திட்டம்” 1507 2025 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த திட்டம் மக்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள சிந்தனை மற்றும் மாற்றங்கள் குறித்து மக்களின் உணர்வுகளை அறியும் விதமாக, “ உங்களுடன் ஸ்டாலின் போட்டிகள்” என்ற தலைப்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் நடத்தியது. அதில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 36 நபர்களுக்கு மாண்பு மிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

“மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி” என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில்தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக ”உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நகர்ப்புறப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 13 துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 15 துறைகளின் 46 சேவைகளும் மக்கள் எளிதாக பயன்பெறும் வகையில் மிக விரைவாகவும் வெளிப்படைத்தன்மை யுடனும் கொண்டு சேர்ப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் ஜூலை 1507 2025 முதல் நவம்பர் மாதம் 2025 வரை 10 ஆயிரம் முகாம்கள் என்ற இலக்குடன் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

“சாதிச்சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய, இருப்பிடச் சான்று, சிறு குறு விவசாயிகள் சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்டவர் சான்று, பிறப்பு இறப்புச்சான்றிதழ், முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மருத்துவ உதவிகள், எரிசக்தித்துறை உதவிகள், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை உதவிகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை உதவிகள், கால்நடை பராமரிப்பு, பால்வளத் துறை உதவிகள், மீன் வளத் துறை உதவிகள் போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக மக்கள் இருப்பிடங்களுக்கே சென்று தீர்வுகளை வழங்கி வருகிறார்கள்.

மேலும் முன்மாதிரியான பல்வேறு முன்னெடுப்புகள் மூலம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக ஒன்றிய அரசின் விருதுகளை வாங்கி குவித்து வருகிறது. இப்படியாக தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதலிடம் வகிக்கிறது. வளர்ச்சி என்பது, ஒரு தனிநபரோ அல்லது சமூகமோ, தங்களின் தற்போதைய நிலையை விட மேம்பட்ட நிலையை அடைவதற்கான ஒரு உயர்ந்த நோக்கமாகும். இது உடல், உளவியல், சமூக மற்றும் பொருளாதார அம்சங்களை உள்ளடக்கியது என்பதை தமிழ்நாடு அரசு உணர்ந்து செயல்பட்டு வருகிறது.

இதனை உணர்த்தும் வண்ணம் உங்களுடன் ஸ்டாலின் அறிவுசார் போட்டிகள் என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கு பெறும் வகையில் சமூக ஊடகங்களான எக்ஸ்தளம் (X),படவரி (Instagram), முக நூல்( Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) வாயிலாகப் போட்டிகள் நடத்தப்பட்டன. அனைத்துப் போட்டிகளிலும் 4732 நபர்கள் கலந்து கொண்டனர். அதில் 36 நபர்கள் வெற்றி பெற்றவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நேரில் பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இந்நிழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே, ராஜராம், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர்(செய்தி) எஸ். செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர்/இணை இயக்குநர் (சமூக ஊடகம்) அ.வே. சுரேந்திரன், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முரசொலி மாறன் 22 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை!

விழுப்புரம், நவ. 29 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. மற்றும் செஞ்சி ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 22 ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,, நகரப் பொருளாளர் நெடுஞ்செழியன், பொறியாளர் அணி ரசூல் பாஷா, மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை, வீடூர்பிரகாஷ், வழக்கறிஞர் கமலக்கண்ணன்,தொண்டரணி பாஷா, நிர்வாகிகள் பஸ்டாண்ட் செல்லன், தமிழ் சீனு, தமிழன் பாபு, சக்திவேல், அன்பு, பிரபா, ஹாஜி, சக்திவேல்,உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின்திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுகளுக்கு ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணி நியமன ஆணைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் நகரப் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்று (28.11.2025) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் கலைஞரின் மனசாட்சியான முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 22 வது நினைவு தினத்தை முன்னிட்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருஉருவப்படத்திற்கு தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.நிகழ்வில் கழக நிர்வாகிகள் ரமேஷ்,அழகுசுந்தரம்,கணேசன், தங்கராஜ் பாண்டியன் சசிகலாகனி, ராமராஜ், முத்துசுப்பிரமணியன், சபீக்அலி, முத்துக்குமாரசாமி, தாஹீராபேகம்,கண்ணன்,சுகுமார், பிரேம்குமார், முருகானந்தம், ஹக்கீம்,மணிகண்டன்,ஆனந்தன், சத்யராஜ்,கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.